
ராணி
காமிக்ஸ்
எத்தனுக்கு
எத்தன்
ரூ. 2

குழந்தைகளே என்னைக் காப்பாற்றுங்கள்!



என் மதிப்பு மிகவும் உயர்ந்தது. ஆனால் அதைப் பற்றிப் பலர் கவலைப்படுவதில்லை. பலவழிகளிலும் அவர்கள் என்னை வீணாக்குகிறார்கள். சாலைகளில், வயல்வெளிகளில், சமையலறைகளில், தொழிற்சாலைகளில், எல்லா இடங்களிலும்.

எனவே, உங்கள் உதவி எனக்குத் தேவை. என்னை (எண்ணெய்) சேமிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

அப்படிச் சேமிப்பதன் மூலம்தான் நமது நாடு எண்ணெய் நெருக்கடியிலிருந்து மீள முடியும். அத்துடன் பணத்தையும் சேமிக்க முடியும். இதனை அனைவருக்கும் நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள்.

என்னைச் சீராகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லும் புதிய, மனதில் பதியக் கூடிய சிறப்பு வாக்கியங்களை எழுதி அனுப்புங்கள்.

முந்துங்கள்! பல பரிசுகளை நீங்கள் வெல்லலாம்

— முதல் பரிசு ரூ.5000/-

— 2 இரண்டாம் பரிசுகள், தலா ரூ.2000/-

— 10 மூன்றாம் பரிசுகள், தலா ரூ.1000/-

— 100 ஆறுதல் பரிசுகள், தலா ரூ.100/-

விதிகள்

1. ஒரு குழந்தை அதிகபட்சமாக இரண்டு சிறப்பு வாக்கியங்களை மட்டுமே அனுப்பலாம். அவை ஆங்கிலம் அல்லது இந்தியில் இருக்கலாம். டீசல், கெரோசின், பெட்ரோல், சமையல்வாயு இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றி எழுதலாம்.
2. 16 வயது வரை உள்ளவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். வயது நிரூபணத்துக்குப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பள்ளிச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
3. கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 28.2.1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உங்கள் சிறப்பு வாக்கியங்கள் வந்து சேர வேண்டும்.
4. எல்லா இந்தியக் குழந்தைகளும் இதில் பங்கு பெறலாம். பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன் மற்றும் அதன் விளம்பர ஏஜென்சிகளில் பணியாற்றும் ஊழியர்களைச் சார்ந்துள்ள குழந்தைகள் இதில் பங்கேற்கக் கூடாது.
5. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. இது தொடர்பாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் ஏற்கப்படமாட்டாது.
6. தெளிவாக எழுதப்படாத சிறப்பு வாக்கியங்கள் ஏற்கப்படமாட்டா.
7. வெற்றி பெறுகிறவர்களுக்குத் தனித்தனியே பதிவுத் தபால் மூலம் முடிவுகள் தெரிவிக்கப்படும்.

சிறப்பு வாக்கியங்களை அனுப்ப வேண்டிய முகவரி: PCRA,

603 நியு டில்லி ஹவுஸ்,

27, பாராகம்பா ரோடு, புது டில்லி 110 001

பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன்

R.K. SWAMY/BBDO PCRA 6016 TAM

அம்மா: டேய்! சுத்தியை வைச்சுகிட்டு ஆணியை அடிக்காதே. கையை நசுக்கிக்கப் போறே.
மகன்: நான் ஏம்மா நசுக்கிக்க றேன்? தங்கச்சியைத்தான் ஆணியைப் பிடிக்கச் சொல்லியிருக்கிறேன்.
"ஏம்பா! மாம்பழம் என்ன விலை?"
"சார்! ஒண்ணு வாங்கினால் ரெண்டு ரூபாய். ரெண்டு வாங்கினால் மூன்று ரூபாய்."
"இந்தா ஒரு ரூபாய். அந்த இரண்டாவது மாம்பழத்தைக் கொடு."
"நான் உன்னைப் பெண் பார்க்க வந்தபோது ரகசியமாக ஐந்து விரல்களையும் குவித்து, வாயால் ஊதி, தலையை ஆட்டி என்னவோ சாடையாக கேட்டியே. என்ன அது?"
"உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா என்று கேட்டேன். அவ்வளவுதான்."
பேராசிரியர் ஏ. சோதி

வால்ரஸ்

கடலில் வாழும் பாலூட்டிகளில் வால்ரசும் ஒன்று. இது சீல் என்ற விலங்கினத்தைச் சேர்ந்தது. இது பசிபிக் வால்ரஸ் அட்லாண்டிக் வால்ரஸ் என இருவகைப்படும். வால்ரசின் மேல் தாடையில் இரண்டு கோரைப் பற்கள் நீண்டு தந்தம் போல் வளர்ந்திருக்கும். ஆனால் சீல்களுக்கு இவ்வாறு வளர்வதில்லை. இதுவே இவ்விரு விலங்குகளுக்குமுள்ள முக்கிய வேறுபாடாகும். தந்தங்கள் ஒரு மீட்டர் நீளமிருக்கும். ஆண், பெண் இரண்டுக்கும் தந்தம் உண்டு.

வால்ரஸ் வடதுருவத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்கிறது. இது கூட்டம் கூட்டமாக வாழும். முழு வளர்ச்சியடைந்த வால்ரஸ் மூன்று அல்லது நான்கு மீட்டர் நீளமிருக்கும். உடல் மிகப் பருமனானது. கண்கள் சிறியவை. முகத்தின் இரு பக்கங்களிலும் விரைப்பான மீசை மயிர் வளர்ந்திருக்கும். கால் விரல்கள் சவ்வு போன்ற தோலினால் இணைக்கப்பட்டுள்ளன. இது கால்களைத் துடுப்பு போலப் பயன்படுத்திக் கொண்டு வேகமாக நீந்தும். கால்களின் அடிப்புறம் சொர சொரப்பாக இருக்கும். பனிக்கட்டியின் மீது பற்றி ஏறுவதற்கு இவை உதவுகின்றன. பனிக்கட்டி அல்லது பாறை மீது படுத்துக் கொண்டு வெயிலில் காய்வது என்றால் வால்ரசுக்கு பிடித்தமான ஒன்று.

நண்டு, நத்தை முதலியவைகளை இது உணவாக உட்கொள்கிறது. கடற்கரையில் புதைந்துள்ள கிளிஞ்சலையும் இது உண்ணும். இவற்றைக் கிளறி எடுப்பதற்கு இதன் தந்தங்கள் பயன்படுகின்றன. எதிரிகளை தாக்குவதற்கும் தந்தங்கள் பயன்படுகின்றன.

வால்ரஸ் நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில்தான் குட்டி போடும். குட்டி இரண்டு ஆண்டு வரை தாயிடம் பால் குடிக்கும். எஸ்கிமோ மக்களுக்கு வால்ரசின் இறைச்சி முக்கியமான உணவாகும். இதன் கொழுப்பிலிருந்து எண்ணெய்யும் எடுப்பார்கள். இதன் தோலை ஆடையாகவும் அணிந்து கொள்வார்கள்.

வால்ரஸ் பொதுவாக சாதுவானது. ஆனால், இதற்கு தீங்கு செய்ய முற்பட்டால், தந்தங்களால் தாக்கும். இவைகள் பெருமளவில் வேட்டையாடப்படுவதால் இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. எனவே இவற்றை வேட்டையாடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

நகராட்சி!

இந்தியாவை வழிநடத்திச் செல்ல மத்திய அரசாங்கம் உள்ளது. அதுபோல மாநிலங்களை கவனிக்க மாநில அரசுகள் உள்ளன. நகரங்களை நிர்வகிப்பதற்கு உருவாக்கப்பட்டவையே நகராட்சியாகும்.

நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் நகராட்சியை நிர்வகிக்கிறார்கள். நகரின் அளவிற்கு ஏற்றாற்போல நகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்கும். ஒவ்வொரு நகரமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படும். தேர்ந்து எடுக்கப்படும் உறுப்பினர்கள் மூன்று ஆண்டு காலம் பதவி வகிப்பார்கள். நகராட்சியின் தலைவரை அந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள நகராட்சி 'மாநகராட்சி' என்று அழைக்கப்படும். மாநகராட்சியின் தலைவரை 'மேயர்' என்று அழைப்பார்கள்.

நகரத்திலுள்ள சாலைகளைப் பராமரித்தல், பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள் ஏற்படுத்துதல், மக்கள் பிறப்பு இறப்புக் கணக்கு வைத்தல் முதலியவை நகராட்சியின் முக்கியப் பணிகளாகும். குடிதண்ணீர், தெரு விளக்கு, முதலிய வசதிகள், நகரத்தின் சுகாதாரம், அழகு, தூய்மை முதலியவையும் நகராட்சியின் கடமையே. இப்பணிகளை நிறைவேற்ற நகராட்சி ஆணையர், சுகாதார அதிகாரி, பொறியியலர், கல்வி அதிகாரி, வரி வசூல் அதிகாரி முதலியோர் இருக்கிறார்கள்.

வீட்டு வரி, சொத்து வரி, கல்வி வரி, தொழில் வரி முதலிய வரிகள் மூலம் நகராட்சிக்கு வருமானம் கிடைக்கிறது. மாநில அரசும் நகராட்சிகளுக்கு மானியம் அளிக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளிலும் நகராட்சிகள் செயல்படுகின்றன. அந்தந்த நாட்டிற்கு ஏற்றவாறு நகராட்சியின் அமைப்பு முறை உள்ளது

ராணி காமிக்ஸ்-159
(மாதம் இருமுறை இதழ்)
பிப்ரவரி 1-15
1991

எத்தனுக்கு எத்தன்

ஒரு காலைப்பொழுது, இயற்கை எழில்கொஞ்சும் கண்டி நகரம் அன்று வழக்கத்துக்கு மாறாக மிகவும் பதட்டத்துடன் காணப்பட்டது. துப்பாக்கிச் சத்தத்தையே கேட்டிராத கண்டி நகரம், துப்பாக்கிக் குண்டுகளின் உறுமலினால் அல்லோகலப் பட்டது. காரணம்– கண்டியில் தங்கம் பாளம், பாளமாக வெட்டி எடுப்பதினால், கொள்ளையர்களின் வருகை அதிக மாக இருந்தது. இப்பொழுதுகூட ஒரு கொள்ளைக்கூட்டம் கண்டி நகரை சூறையாட வண்டியில் வந்துகொண்டிருக் கிறது. தொடர்ந்து படியுங்கள்!



கொள்ளையர்கள் வண்டியில் இருந்து துப்பாக்கியுடன் குதித்தார்கள். தெருவில் நின்றவர்கள் எல்லாம் அலறியடித்துக் கொண்டு ஓட்டம்பிடித்தனர்.
கொள்ளையர்கள் வந்துவிட்டார்கள்! ஓடுங்கள்!
டுமீல்...!

இது மிராண்டாவின் கூட்டம்தான் சந்தேகமில்லை! தங்கத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்!


இவன்தான் கொள்ளைக்கூட்டத் தலைவன் மிராண்டா!
இங்குதான் தங்கம் இருக்க வேண்டும்! வா, பார்ப்போம்!
நீங்கள் முன்னால் செல்லுங்கள்! நான் பின்னால் வருகிறேன்!

மிராண்டா ஒரு மரப்பலகை வீட்டின் பின்பக்கமாக சென்று சன்னலை திறந்தான்.
இங்கேதான் தங்கம் இருக்கிறது! விரைவாக வா!

உள்ளே– இருவர் தங்கப் பெட்டகத்துக்கு துப்பாக்கியுடன் காவல் இருந்தார்கள்.
டேய்! துப்பாக்கியை கீழே போடு! நான் சொல்றபடி செய்!

மரியாதையாக பெட்டகத்தை திற!
முடியாது! நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்த தங்கத்தை இப்படி அநியாயமாக கொள்ளையடிக்கிறாயே!

செரீப் ஊரில் இல்லாத நேரம் பார்த்து கொள்ளையடிக்க வந்திருக்கிறாயா?
ஏய்!- அதிகம் பேசாதே. பிறகு என் துப்பாக்கிதான் பேசும்!
அடுத்த ஐந்து நிமிடத்தில்—
சரி! அனைவரும் புறப்படுங்கள்! வந்த வேலை முடிந்து விட்டது!
கிடைத்த தங்கத்தை சுருட்டிக்கொண்டு மிராண்டா வெளியேறினான்.

மிராண்டாவின் கூட்டம் குதிரையில் ஏறி பறந்தது.
இரவுக்குள் கண்டி நகர எல்லையை தாண்டிவிட வேண்டும்!

அதேநேரம்– கண்டி நகர மக்கள் ஆத்திரத்தில் கொப்பளித்தார்கள்.
நடக்கிற கொள்ளைகளை செரீப் கண்டுகொள்வதே இல்லை!
இப்படியே போனால், நாம் ஊரைவிட்டு வெளியேற வேண்டியதுதான்!

தங்கத்தை பறிகொடுத்தவர், வெளியூரில் இருந்து திரும்பி இருந்த ஷெரிப்பை காண வந்தார்.
சார்! கொள்ளையர்கள் என் தங்கம் முழுவதையும் கொள்ளையடித்து விட்டார்கள்!
கொள்ளையடித்து விட்டார்களா? யாருடைய வேலை இது?
நான் ஊரில் இல்லாத போது தான் இது மாதிரி நடக்கிறது! யார் என்று உங்களுக்குத் தெரியுமா?
தெரியும்!
மிராண்டாதான் என் தங்கத்தை கொள்ளை யடித்துவிட்டுச் சென்று விட்டான்!
எப்படியும் அவனை கண்டு பிடித்து உங்கள் தங்கத்தை மீட்டுத் தருகிறேன்!

அப்போது– செரீப்பின் வீட்டுக்குள் கற்கள் சராமாரியாக வந்து விழுந்தது.
என்ன இது?
செரீப் பதட்டத்துடன் வீட்டைவிட்டு வெளியே வந்தார்.
நான் சொல்வதைக் கேளுங்கள்!
நீங்கள் சொல்வதை கேட்க நாங்கள் தயாராக இல்லை! இப்படியே போய்க் கொண்டிருந்தால் நாங்கள் சாக வேண்டியதுதான்!

இதுவரை நடந்த கொள்ளைகளுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?
ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா?
SALO
பிறகு எதற்கு உங்களுக்கு செரீப் பதவி!

அனைவரும் ஒட்டுமொத்தமாக செரீப்பை குற்றம் சாட்டினார்கள்.
அப்படியானால், நான் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறீர்களா?

பரவாயில்லை! அனைவரும் வீட்டுக்குச் செல்லுங்கள்! விரைவில் இந்த கொள்ளைகளுக்கு முடிவுகட்டுகிறேன்! இல்லை, உங்கள் இஷ்டப்படியே என் பதவியை ராஜினாமா செய்துவிடுகிறேன்!
செரீப், தன் மகள் மேரியிடம் விசயத்தை சொன்னார்.
மேரி! எப்படியாவது அந்தக் கொள்ளையர்களை கண்டு பிடித்து சிறையில் அடைக்கப் போகிறேன்!
அப்பா! நம் நகரில் சிறை என்ற வார்த்தைக்கே இடமில்லாமல் இருந்தது. ஆனால் கொஞ்ச நாளாக நகரில் கொள்ளைகள் அதிகரித்துவிட்டன!

மிராண்டா தான் கொள்ளையடித்த தங்கத்தை விற்க அருகில் உள்ள சாண்டியா நகருக்கு வந்தான்.
இதற்கு ஐந்து லட்ச ரூபாய் தருகிறேன்!
ஐந்து லட்சமா? இதன் மதிப்பு பத்து லட்சம் இருக்கும்!
திருட்டு தங்கத்துக்கு அதிக விலை கொடுக்க முடியாது! மெக்சிகோ நாட்டு கொள்ளையன் ஜானுக்கு தெரிந்தால் என்னைக் கொன்று விட்டு தங்கத்தை எடுத்துச் சென்றுவிடுவான்!

ஓ.கே. ஐந்து லட்சத்தைக் கொடு!
இதோ இப்பொழுது தருகிறேன்!
கடைக்குள் இருந்து ஒருவன் வெளியே வந்தான்.
பணத்தை வாங்கிக்கொண்டு மிராண்டா புறப்பட்டான்.
முட்டாள்! போய் விட்டான்!
குப்தா! நான் சொன்னபடியே அருமையாக நடித்து அவனை ஏமாற்றிவிட்டாய்!
புதிதாக வந்தவன் மெக்சிகோ கூட்டத்து தலைவன் ஜான்.
இரத்தம் சிந்தாமல், எளிமையாக ஐந்து லட்ச ரூபாய் சம்பாதித்து விட்டோம்!

பணத்தை பெற்றுக்கொண்ட மிராண்டா மதுபான கடைக்கு வந்தான்.
இங்கே நிற்காதே! விலகிப் போ!
நான் எதற்கு விலகிப் போக வேண்டும்!
இளைஞன் ஒருவனை துரத்த முயன்றார்கள்.
எதற்கா? நான் சொல்கிறேன்!
யாருக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் எனக்கில்லை!
அந்த இளைஞனின் பெயர் மைக். அஞ்சாநெஞ்சன். சட்டத்தை மதிப்பவன்.

நான் யார் என்று தெரிந்தால் இப்படி பேசமாட்டாய்! நான்தான் மிராண்டா
ஓகோ! கேள்விப் பட்டிருக்கிறேன்! அந்தக் கொள்ளைக்காரன் நீதானா?
மைக்கின் பேச்சைக் கேட்டு ஆத்திரமடைந்த மிராண்டா துப்பாக்கியை எடுத்து சுட முயன்றான்.


ஏன் இப்படி அவசரப் படுகிறாய்!
மைக் அவன் மணிக்கட்டில் ஒரு குத்துக் குத்த துப்பாக்கி நழுவி விழுந்தது.

அடுத்த நிமிடம்—
உன்னைப் போல் அதிகாரம் பண்ணி எனக்கு பழக்கமில்லை!
என்னை கீழே இறக்கு! நான் சொல்வதைக கேள்!
மைக் மிராண்டாவை தலைக்கு மேலே தூக்கி வீசி எறிந்தார்.
என்னிடமா உன் வீரத்தை காட்டு கிறாய்...!
CRASH

பிழைத்துப்போ! மற்றவர்களை விரட்டுவது போல என்னை மிரட்டப் பார்க்காதே! வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்!

மைக் மிராண்டாவை எச்சரித்துவிட்டு புறப்பட்டார். உடனே மிராண்டாவின் ஆள் ஒருவன் துப்பாக்கியை எடுத்தான்.
பாஸ்! இருங்கள் அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்!

அதற்குள்- மைக் துரிதமாக செயல்பட்டு அவனை தடுமாற வைத்தார்.
முட்டாள்! தைரியமிருந்தால் நேருக்குநேர் வாடா?
ALOON
டுமீல்...!

மறுநாள்- மைக் கண்டி நகருக்கு வந்து செரிப்பை பார்த்தார்.
வாருங்கள் மைக்! உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!
என்ன மேரி! நலந்தானே!

மைக்கை கண்டதும் மேரியின் கண்கள் கண்ணீரை கொட்டியது.
மேரி! என்ன இது? ஏன் அழுகிறாய்?
மைக்! இரண்டு நாளில் நடக்கக் கூடாததெல்லாம் நடந்துவிட்டது!
மைக்! நான் வெளியூர் சென்றிருந்த சமயம், கொள்ளையர்கள் நகருக்குள் புகுந்து நகரை கொள்ளையடித்து விட்டுச் சென்றுவிட்டார்கள்!
அப்படியா?
அதனால் ஊர் மக்கள் என்னை பதவி விலகச் சொல் கிறார்கள்! அதை நினைத்துத்தான் மேரி கண்கலங்குகிறாள்!

செரீப் கொள்ளையர்களைப் பற்றிச் சொன்னார்.
கூட்டத் தலைவன் பெயர் மீராண்டா! அவனை கண்டுபிடித்து எப்படியாது சிறையில் அடைக்க வேண்டும்!

மிராண்டாவை உனக்குத் தெரியுமா?
தெரியும்! அவன் எங்கு பதுங்கியிருக்கிறான் என்பதும் எனக்குத் தெரியும்!

அதேநேரம்— மிராண்டா பணத்தை எடுத்துக்கொண்டு ஒரு கடைக்குச் சென்றான்.
என்ன வேண்டும்!
30 ஆயிரம் ரூபாய் இருக்கிறது. அதற்கு துப்பாக்கி, வெடிகுண்டுகள், வெடிமருந்துகள் வேண்டும்!
பணத்தை பார்த்த கடைக் காரன், ஆத்திரமடைந்தான்.
இது அத்தனையும் கள்ளநோட்டு! என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?
கள்ளநோட்டா?
உண்மையைச் சொல்!
உண்மையைத்தான் சொல்கிறேன்! இது நல்ல நோட்டு அல்ல! உங்களை யாரோ ஏமாற்றி யிருக்கிறார்கள்!

மிராண்டா ஆத்திரத்துடன் வெளியே வந்தான்.
என்னையே ஏமாற்றிவிட்டான்! அவனை சும்மாவிடக் கூடாது!
மிராண்டா நேராக குப்தாவின் கடைக்கு வந்தான்.
குப்தாவை எங்கே?
வியாபார விசயமாக வெளியூர் சென்றிருக்கிறார்!
குப்தா அங்கே இல்லை.
ஏய்...! ஐந்து எண்ணுவதற்குள் குப்தா எங்கே போயிருக்கிறான் என்று சொல்லிவிடு! இல்லை...!
மிராண்டா துப்பாக்கியை அவனுக்கு நேராக நீட்டினான்.

குப்தா மலைக்கோட்டைக்கு போயிருக்கிறார்.
நீ என்னுடன் வந்து மலைக்கோட்டையை காட்டு! அவனை பிடித்த பிறகுதான் உன்னை விடுவேன்!

மிராண்டாவின் ஆட்கள் கூடிப் பேசினார்கள்.
மலைக்கோட்டையா? அங்குதான் குப்தா பதுங்கி யிருக்கிறானா?
ஆமாம்!

உடனே மிராண்டா மலைக்கோட்டையை நோக்கி படையெடுத்தான்.
வாருங்கள்! சூரியன் மறைவதற்குள் அவனை மடக்கிவிட வேண்டும்!

அதேநேரம்- கண்டி நகரில்.
மிராண்டாவைப் பற்றி கவலைவேண்டாம்! அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்!
மைக்! மிராண்டா இருக்கும் இடத்தை மட்டும் சொல்! நான் அவனைப் பார்த்துக் கொள்கிறேன்!


வேண்டாம் செரீப்!
நீங்கள் இங்கே இருந்து நகரை பார்த்துக் கொள்ளுங்கள்! நான் வருகிறேன்!
மைக் மிராண்டாவை தேடிப் புறப்பட்டார்.

மலைக்கோட்டையில்- குப்தாவை பிடிக்க அவன் ஆள் ஒருவனை. மலையில் நிற்க வைத்துவிட்டு மிராண்டாவும் அவனுடைய ஆட்களும் சுற்றிப் பதுங்கி இருந்தார்கள்.
இவனை வைத்து குப்தாவை எப்படியும் பிடித்துவிடலாம்!

அதற்குள் அவன்– மறைந்திருக்கும் குப்தாவை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காக வானத்தை நோக்கிச்சுட்டான்.
டேய் முட்டாள்! உன்னை யாரடா சுடச் சொன்னது!
டுமீல்...!
BANG
படார்!
மிராண்டா அவனை மூர்க்கத்தனமாக தாக்கினான்.

அதற்குள் மிராண்டாவின் ஆட்கள் எச்சரிக்கையுடன் பாறையின் மறைவிடங்களை நோட்டமிட்டார்கள்.

பாறைக்கடியில் மறைந்திருந்த குப்தா குண்டுச் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்த அடுத்த விநாடி– மிராண்டா அவனை மடக்கினான்.
குப்தா! நீ என்னை எதிர்பார்க்க வில்லை. அப்படித்தானே! நான் எத்தனுக்கு எத்தன். என்னிடமே விளையாடுகிறாயா?
கள்ளநோட்டை கொடுத்து என்னை ஏமாற்றிவிட்டாய்! மரியாதையாக தங்கத்தைக் கொடு! டேய், தங்கத்தை தேடுங்கடா!
அடுத்த பத்து நிமிடத்தில்– ஒருவன் ஒரு பையுடன் வந்தான்.
சார்! தங்கம் இங்கு இல்லை!
இல்லையா? தங்கத்தை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?
மிராண்டா கொதிப் படைந்தான்.


உண்மையாக தங்கம் என்னிடம் இல்லை! மெக்சிகோ கூட்டத் தலைவன் ஜான் தங்கத்தை எடுத்துச் சென்றுவிட்டான்!
ஜானா?
அப்போது– அவ்வழியே மைக் குதிரையில் விரைந்து வந்து கொண்டிருந்தார்.
என்ன துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது! ஏதோ விபரீதம் நடக்கிறது!


அங்கே– குப்தாவை மிரட்டிக் கொண்டிருந்த மிராண்டா கூட்டத்ததை, மைக் விரட்டினார்.
அய்யோ என்னைக் காப் பாற்றுங்கள்!

மைக் குதிரையில் இருந்து இறங்கி குப்தாவிடம் வந்தார்.
என்ன நடந்தது?
மிராண்டாவின் தங்கத்தை நான் அபகரித்துவிட்டதாக சொல்லி என்னை சித்திரவதை செய்கிறான். ஆனால் அவன் தங்கத்தை ஜான் எடுத்துச் சென்று விட்டான்.

குப்தா நடந்தவற்றை விளக்கமாக கூறினான்.
கண்டி நகரில் கொள்ளை போன தங்கம், கடைசியில் மெச்சிக்கோ கூட்டத்துக்கு சென்று விட்டது!
விடக்கூடாது! இரண்டு கூட்டத்தையும் கண்டுபிடித்து கூண்டோடு அழிக்க வேண்டும்!
மைக் ஒருவித வேகத்துடன் குதிரையை தட்டிவிட்டார்.
இந்தப் பாதையில்தான் சென்றிருக்கிறார்கள்! குதிரைகளின் கால் தடங்கள் இருக்கின்றன!

ஓர் இடத்தில் மிராண்டா முகாமிட்டிருந்தான்.
முட்டாள்! ஜான் நம்மையே ஏமாற்றி விட்டான்!
இனி என்ன செய்வது! மிராண்டா இங்குதான் இரவை கழிக்கப் போகிறானா?
அதற்குள் மைக்கும் வந்து சேர்ந்தார்.

நகருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள பழைய கட்டிடத்தில்தான் ஜான் பதுங்கியிருப்பான்! நாம் அங்கே செல்வோம்!

அவனிடமிருந்து எப்படியும் தங்கத்தை எடுத்துவிட வேண்டும்! இதுவே என் இலட்சியம்!
ஜானை மடக்குவதும் சுலபமானது அல்ல! அதற்கு நம் மூளையை உபயோகிக்க வேண்டும்!
பாஸ்! ஜானைத் தேடி அலைவதைவிட நாம் மீண்டும் கண்டி நகருக்குச் சென்று திரும்பவும் ஒரு வேட்டை நடத்தலாமே!
முட்டாள்! ஜானுக்கு நான் யார் என்று காட்ட வேண்டும்! அதற்கு நான் ஒரு யோசனை வைத்திருக்கிறேன்!


அன்று இரவு— மிராண்டாவின் கூட்டம் அந்த பழைய கட்டிடத்துக்கு வந்தது.
கட்டிடத்தை வெடி வைத்து தகர்த்து விட வேண்டியது தான்!
இருவரும் வெடிகுண்டை கட்டிடத்தில் வைத்துவிட்டு ஓட்டம்பிடித்தார்கள்.

கட்டிடம் தூள் தூளாகப் போவதை காண ஆவலுடன் காத்திருந்தார்கள்.
அடுத்த நிமிடம்—
பயங்கர வெளிச்சத்துடனும், இடியோசையுடனும் குண்டு வெடித்தது.
ஜான் தொலைந்தான்!
மிராண்டா குதூகலித்தான்.

அடுத்த நிமிடம்-
அங்கே பாருங்கள்! தீ மளமளவென்று எரிகிறது! ஜான் இந்நேரம் சாம்பலாகி இருப்பான்.
மிராண்டா துப்பாக்கியுடன் கட்டிடத்துக்குள் நுழைந்தான்.
வாருங்கள்! உள்ளே சென்று பார்ப்போம்!
உள்ளே ஜான் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தான்.
ஜான்! மரியாதையாக துப்பாக்கியை கீழே போடு!

தங்கத்தை எங்கே வைத்திருக்கிறாய்? சொல்! இல்லை உன்னைக் கொன்றுவிடுவேன்!
மிராண்டா! என்னை ஒன்றும் செய்துவிடாதே! உன் தங்கத்தை கொடுத்துவிடுகிறேன்!
ஜான் அவர்களை அழைத்துச் சென்று தங்கத்தைக் கொடுத்தான்.
அட! வைரங்கள் கூட இருக்கின்றனவே!
ஒன்றையும் விடாதே! அனைத்தையும் எடுத்து மூட்டை கட்டு.

கிடைத்ததை சுருட்டிக்கொண்டு மிராண்டா புறப்பட்டான்.
பார்த்தீர்களா? தங்கத்தை தேடி வந்தால் வைரம் கிடைக்கிறது!

மிராண்டா மீண்டும் முகாமுக்கு வந்தான்.
போனவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள்! தங்கத்தை கொண்டுவந் திருப்பார்களா?
மைக் அங்கேயே காத்திருந்தார்.

நாம் இனி இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நமக்கு ஆபத்துதான். அதனால் நாம் உடனே புறப்பட வேண்டும்!
உடனே அனைவரும் 'செவ்விந்தியர்களைப் போல உடை உடுத்தி புறப்பட்டார்கள்.
இனி நமக்கு எந்தவித பயமும் இல்லை! புறப்படலாம்!
ஓ.கே. பாஸ்!

அடுத்த நிமிடம்– அனைவரும் குதிரையில் ஏறி பறந்தார்கள். மைக் மறைந்திருந்து நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தார்.
ஜான் கையில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக இந்த மாறுவேடம்! புத்தி சாலிகள்தான்!
மைக்கும் அவர்களை பின்தொடர்ந்து சென்றார்.
சிறிது தாமதித்தே செல்வோம்! அவர்கள் என்னை பார்த்துவிடக் கூடாது!

மைக் குதிரையை மெதுவாக ஓட்டி வந்தார்.
ஒரு திருப்பத்தில்—
பிடி அவனை!
பாறைகளுக்கு இடையில் சிலர் மறைந்திருந்தார்கள்.

ஒருவன் மைக் மீது பாய்ந்தான்.
ஏய்....! என்ன இது.

மைக் எழுந்த வேகத்தில் 'நச்'சென்று ஒன்று கொடுத்தார்.
ஆ...அம்மா...!
கும்...!

அப்போது—செவ்விந்தியன்ஒருவன் மறைந்திருந்து நடப்பதை பார்த்துக்கொண்டிருந்தான்.
ஒருவனை இத்தனை பேர் தாக்கு கிறார்களே!

அனைவரும் ஒட்டுமொத்தமாக மைக்கை பிடித்து நிறுத்தினார்கள்.
பாவம்! இவன் ஒருவனால் என்ன செய்ய முடியும்?
மைக்கை சூழ்ந்து கொண்டவர்கள் வேறு யாருமல்ல, ஜானும் அவன் ஆட்களும்தான். மிராண்டாவை தேடிவந்த ஜான், மைக்கை பிடித்துக்கொண்டான்.
மிராண்டா எங்கே? மரியாதையாக சொல்!
நீங்கள் நினைப்பது போல நான் மிராண்டா கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல.
நானும் அவனைத் தேடித்தான் வந்திருக்கிறேன்!

அவனுக்கும் உனக்கும் என்ன உறவு?
அவனிடம் ஒரு கணக்கை தீர்க்க வேண்டியிருக்கிறது! விரைவில் தீர்த்துவிடுவேன்!
இல்லை! நான் உன்னை நம்ப மாட்டேன்! உயிர் பிழைப்பதற்காக இப்படி நாடகமாடுகிறாய்!
பொறுங்கள்! இவனைப் பார்த்தால் மிராண்டாவின் ஆள் மாதிரி தெரியவில்லை! இவனை நம்புவோம்!

ஜான், மைக்கை கூட்டிக்கொண்டு குதிரையில் புறப்பட்டான்.

செவ்விந்தியன் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.
முதலில் சண்டை போட்டார்கள். அதற்குள் ஒற்றுமையாகி இருவரும் இன்னொருவனை தேடிப் போகிறார்கள்!

அப்பாவிடம் போய் விசயத்தைச் சொல்ல வேண்டும்! அல்லது இந்த வெள்ளை நாய்களால் நமக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடும்!
செவ்விந்தியன் குதிரையில் ஏறி விரைந்தான்.

இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு ஓர் இடத்தில், ஜானும், மைக்கும் மிராண்டாவை பார்த்தார்கள்.
அதோ மிராண்டா வருகிறான்!
ஆமாம்! வரட்டும்! அவன் எத்தனுக்கு எத்தன் என்றால் நான் யார் என்று அவனுக்கு காட்டுகிறேன்!
தூரத்தில் மிராண்டாவின் கூட்டம் வந்துகொண்டிருந்தது.
உடனே ஜான் கூட்டத்தினர் மறைந்து கொண்டார்கள்.
சுடுங்கடா அவர்களை! யாரும் உயிரோடு திரும்பக் கூடாது!
ஜான் கூட்டத்தை பார்த்த மிராண்டாவும் ஆவேச மானான்.
கொல்லுங்கடா அவர்களை!

இரண்டு கூட்டமும் சுட்டுக்கொண்டன.
டுமீல்...!
டுமீல்...!
நம்மைத் தேடித்தான் ஜான் இங்கே வந்திருக்கிறான்!
நாம் அவனிடம் கொள்ளையடித்ததற்கு பழிக்குப் பழிவாங்க வந்திருக்கிறான்!
முட்டாள்! பேச இதுவல்ல நேரம்! சுட்டுத்தள்ளு!
டுமீல்...
ஆ...! ஆ...!

அந்த நேரம் பார்த்து செவ்விந்தியர்கள் கூட்டம் விரைந்து வந்தது.
ஒருவரையொருவர் சுட்டுக்கொண்டு சாகட்டும்!
அப்பொழுதுதான் நாம் அவர்களை எளிதாக மடக்க முடியும்!
அப்படியே செய்வோம்!
சில நிமிடங்களில் செவ்விந்தியர்கள் அவர்களை நோக்கி படையெடுத்தார்கள்.
வெள்ளை நாய்கள் ஒருவரைக்கூட விடக்கூடாது!

ஆ...! செவ்விந்தியர்கள்!
டேய்! ஒரே நேரத்தில் இரண்டு கூட்டத்தையும் சமாளிக்க முடியாது!
திடீரென்று இடையில் புகுந்த செவ்விந்தியர்களைக் கண்டு மிரண்டு போனார்கள்.
டேய்...! வெள்ளை நாய்களே!
செவ்விந்தியர்கள் எவரையும் தப்பிக்க விடவில்லை.
டேய்! விலகிப் போடா நாயே!
மைக் ஒருவனை செமத்தியாக தாக்கினார்.


நடந்த சண்டையில் மைக், மிராண்டா, ஜான் மூவரைத் தவிர மற்றவர்கள் இறந்து போனார்கள். மூவரையும் செவ்விந்தியர்கள் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள்.
இவர்களை சும்மா விடக்கூடாது!
மூவரையும் தலைவரிடம் கொண்டுவந்தார்கள்.
இவர்களை அணு அணுவாக சித்திரவதை செய்ய வேண்டும்!
வேடிக்கை பார்க்க செவ்விந்தியர்கள் கூடி நின்றார்கள்.

அப்பா! இவர்களை தண்டிக்க நான் ஒரு அருமையான யோசனை சொல்கிறேன்!
சொல் மகனே! நிறைவேற்றி வைக்கிறேன்!
அதோ நடுவில் நிற்கிறானே அவனுடன் நான் மோதுகிறேன். யார் வெற்றி பெறுகி றார்கள் என்று பார்ப்போம்!
வேண்டாம் மகனே! ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடக்கூடும்!

அப்பா! என் திறமை மேல் உங்களுககு நம்பிக்கை யில்லையா?
அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மகனே! சரி, உன் இஷ்டப்படியே நடக்கட்டும்!
தலைவரின் மகன் சண்டைக்கு தயாரானான்.
விடு அவனை! என்னுடன் மோதத் தயாரா?
சண்டையா? பரவாயில்லை, மோதிப் பார்த்துவிடுவோம்!
மைக்கும் தயாரானார்.

அவனுடன் மோத வேண்டாம்! தோற்றுப் போய்விடுவான்! அவனுக்குப் பதிலாக என்னுடன் மோது!
அவன் சொல்வதும் நியாயம்தான்! அவனிடமே மோது!
இல்லை! உங்கள் மூவரில் நீ ஒருவன்தான் பலசாலியாக இருக் கிறாய். அதனால் நீதான் என்னுடன் சண்டையிட வேண்டும்!
சண்டையில் நீ வெற்றி பெற்றுவிட்டால் உனக்கு விடுதலை! பிறகு இந்த இரண்டு நாய்களும் உனக்கு அடிமை! சம்மதமா?
சம்மதம்! நான் தயார்!

அடுத்த நிமிடம் சண்டை ஆரம்பமானது. தலைவரின் மகன் மைக்கை தலைகீழாக தூக்கிப் போட்டான்.
திடீர் தாக்குதலை சந்தித்த மைக் பிரமித்துத்தான் போனார்.
என்ன தோல்வியை ஒப்புக்கொள்ளுகிறாயா?
இல்லை! அவசரப்படாதே!

பாய்ந்து வந்தவனை மைக் காலால் எட்டி உதைத்தார்.
நீ பெரிய வீரனாக இருக்கலாம்! அதற்காக மார்தட்டிக் கொள்ளாதே! இந்தா வாங்கிக்கொள்!
ஆ...! அம்மா!
அதற்குள் அவன் மைக்கின் மீது பாய்ந்து கழுத்தை நெறித்தான்.
சுதாரித்துக்கொண்ட மைக், அவனை தலைக்கு மேலே தூக்கினார்.

அடுத்த விநாடி– மைக் தன் பலம் முழுவதையும் திரட்டி அவனைத் தூக்கி 'நச்' என்று போட்டார்.
மகனே என்ன இது?
தலைவன் பதறினான்.

என்னாச்சு மகனே! ஏன் இப்படி சோர்ந்து விட்டாய்! ஒரு வெள்ளை நாயை உன்னால் சமாளிக்க முடியவில்லையா?

ஆனால், விழுந்தவன் எழுந்திரிக்கவில்லை.
வெள்ளை நாயே! என் மகனைக் கொன்று விட்டாய்!
அவனை பிடியுங்கள்.
தலைவன் ஆத்திரத்தில் உறையில் இருந்து கத்தியை உருவினான்.
அதற்குள் விழுந்து கிடந்தவன் எழுந்து தந்தையை தடுத்தான்.
அப்பா! நிறுத்துங்கள்! அவசரப்படாதீர்கள்!
அப்பா! நான் சண்டையில் தோற்று விட்டேன்! என்னை மன்னியுங்கள்!

மகனே! நான் சொன்ன சொல்லை என்றுமே மீறமாட்டேன்! அதனால் அவனை விடுதலை செய்கிறேன்!
மைக்கை விடுதலை செய்து, மிராண்டாவையும், ஜானையும் அவனிடம் ஒப்படைத்தார்கள்.
ரெம்ப நன்றி! நான் உங்களை என்னவோ என்று நினைத்தேன்!
மைக், மிராண்டாவையும், ஜானையும் அழைத்துக்கொண்டு செரீப்பைக் காண விரைந்தார்.

ஒரு திருப்பத்தில் மைக்கின் குதிரை கல் இடறி தடுமாற- குதிரையில் இருந்த மைக் நிலைதடுமாறி, ஒரு பாறையில் விழுந்தார்.
ஆ....ஆ...!
கீழே விழுந்த மைக்கிற்கு தலையில் பலத்த அடி. அதனால் மைக் மயங்கிக் கிடந்தார்.
அவனே அவன் முடிவை தேடிக் கொண்டான்!
ஆமாம்!
இவனிடமிருந்தும் நாம் தப்பியாகி விட்டது!
கீழே கிடந்த மைக்கை மிராண்டா சோதனை செய்ததில் பையில் இருந்து ஒரு அட்டையை எடுத்தான்.
ஆ...! இவன் ஒரு இரகசிய உளவாளி!

அதற்குள் ஜான் துப்பாக்கியை எடுத்து மிராண்டாவை குறிவைத்தான்.
எப்பொழுதும் இரண்டு எதிரிகள் உயிரோடு இருக்கக்கூடாது! தொலைந்து போ!
ஏய்... என்ன இது?
மிராண்டா இறந்து போனான்.
அதேநேரம்—
என்ன மருத்துவரே, என் மகனுக்கு காயம் எதுவும் ஏற்பட்டிருக்கிறதா?
ஆமாம் தலைவரே! தலையில் ஏற்பட்டிருக்கிற காயத்தைப் பார்த்தால் அவன் பிழைப்பது கடினம்தான்!
என்னது? என் மகன் சாகப் போகிறானா? கூடாது! அந்த வெள்ளை நாய்களை உடனே பிடிக்க வேண்டும்!

உடனே செவ்விந்தியர் படை மைக்கைத் தேடி ஆவேசமாக புறப்பட்டது.
அந்த நாய்கள் எங்கே போனாலும் விடக்கூடாது! குதிரையை வேகமாக விரட்டுங்கள்.

அங்கே– மைக் மயக்கம் தெளிந்து மெதுவாக எழுந்து பார்த்தார். மிராண்டாவும், ஜானும் ஆளுக்கொரு பக்கமாக விழுந்து கிடந்தனர்.
அவர்களுக்குள் என்ன நடந்தது? ஏன் இப்படிக் கிடக்கிறார்கள்!

முட்டாள்கள்! தங்கத்துக்காக
இருவரும் அடித்துக்
கொண்டிருக்
கிறார்கள்!
மைக் இருவரையும் குதிரை
யில் தூக்கிப் போட்டார்.
கண்டி நகருக்கு சிறிது
தூரம்தான் இருக்கிறது.
இவர்களை எப்படியும்
செரீப்பிடம் ஒப்படைத்
துவிட
வேண்டும்!
அதற்குள்– செவ்விந்தியர்கள் விரட்டி வருவதை பார்த்தமைக்
குதிரையை வேகமாக தட்டிவிட்டார்.
செவ்விந்தியர்களுக்கு
அதற்குள் மனம் மாறிவிட்டதா?
பிறகு ஏன் நம்மை விரட்டி
வருகிறார்கள்!

செரீப், மைக்கை தேடி அவ்வழியே வந்துகொண்டிருந்தார்.
செவ்விந்தியர்கள் மைக்கை ஏன் விரட்டி வருகிறார்கள்! அவர்களை உடனே தடுக்க வேண்டும்!
செரீப் துரிதமாக செயல்பட்டார். ஒரு பெரிய பாறையை செவ்விந்தியர்கள் மீது நகர்த்திவிட முயன்றார்.
இத்தோடு அவர்கள் கதை முடியட்டும்!
அடுத்த விநாடி– பாறை செவ்விந்தியர்களை நோக்கி உருண்டு வந்தது.

பாறை விரைந்து வந்து செவ்விந்தியர்களை பதம் பார்த்தது.
ஆ! பாறைகள் சரிந்து நம்மை அமுக்கிவிடும் போலிருக் கிறதே!
ஆ...அம்மா!
ஆ...அம்மா!

செவ்விந்தியர்கள் அனைவரும் பாறைக்கு அடியில் சிக்கி உயிர் இழந்தார்கள். செரீப், மைக்கை காண கீழே இறங்கி வந்தார்.
செரீப்! தக்க சமயத்தில் வந்து உதவி செய்தீர்கள்!
மைக்! உன்னை காப்பாற்ற சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்
பி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்
சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 109
பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் - 23

ரூ.500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து ஒன்று சேருங்கள். உலகம் முழுக்க பரபரப்பாகப் பேசக்கூடிய ஒருவர் கிடைப்பார். அவர் யார்? கண்டுபிடியுங்கள்! உங்களுக்காக ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அவர் யார் என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரி கூப்பனை வெட்டி ஒட்ட வேண்டும்.

சரியான விடை எழுதியவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 13–2–91.

அனுப்ப வேண்டிய முகவரி:-

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

<u>கண்டுபிடியுங்கள் – 21</u>

பரிசு பெற்றவர்கள்:–

ஜனவரி 1-ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடியுங்கள் போட்டியின் விடை:- சபரிமலை.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:–

(1) பி. அருள்மொழி, சென்னை-13. (2) டி. செந்தில்குமார், தெற்குப்பனையூர். (3) வி. லெட்சுமி, மதுரை-19. (4) ஏ. முருகன், பரங்கிப்பேட்டை. (5) ஜே. சிவசங்கரி, விழுப்புரம்.

(6) தெ. பாரதிமோகன், திருக்குவளை. (7) வே. கபாபாரதி, தென்காசி. (8) சிவகுமார், அவினாசிபாளையம். (9) சூரியா, காவேரிப்பட்டினம். (10) பி. ஆறுமுகம், சாயல்குடி.

(11) ஜே. ஜெயஸ்ரீ, பாண்டிச்சேரி. (12) பழ. மாணிக்கம், அரிமழம். (13) அ. நிர்மலா, மின்னாம்பள்ளி. (14) கே. தண்டபாணி, கன்னிவாடி. (15) சா. விமலி பிளான்ரஸ், கோவை.

(16) எம். பிரகாஷ், பெங்களூர்-22. (17) எஸ்.பி.பி. மகேசுவரி, பழனி. (18) ஆ. நித்தியானந்தம், கவுண்டம்பாளையம். (19) ஏ. லீமா, திருச்சி. (20) கி. ரமேஷ்குமார், டானிஷ்டன்.

(21) ஆர். மைதிலி, போடிநாயக்கனூர். (22) எஸ். வள்ளிநாயகம், திருச்செந்தூர். (23) எம். பதிமாவதி, சின்னசேலம். (24) பி. பிரஞ்சோதி, அறந்தாங்கி. (25) எம். செல்வி, சென்னை-40.

★

முட்டாள் சீடன்

–பேராசிரியர் ஏ. சோதி

ஓர் ஊரில் மருத்துவன் ஒருவன் இருந்தான். சுற்றியுள்ள ஊர்கள் பலவற்றிற்கும் அவனை விட்டால் ஆள் இல்லை.

தனக்குத் துணையாகவும் தன் தொழிலைத் தெரிந்துகொள்ளவும் சீடன் ஒருவனை வைத்துக்கொண்டான்.

எங்குச் சென்றாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள். மருத்துவன் அறிவுள்ளவனாக இருந்தான். ஆனால் சீடனோ அவனுக்கு நேர்மாறாக இருந்தான்.

ஒருநாள் இருவரும் மருத்துவம் செய்ய ஒரு வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

அங்கே நாற்பது வயதுக்கு மேற்பட்ட தோற்றம் உடைய ஒருவர் வயிற்றுவலியால் துடித்துக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்ததும் மருத்துவனால் கோபத்தை அடக்க முடியவில்லை.

"உமக்கு என்ன வயதாகிறது? பனங்கிழங்கைச் சாப்பிட்டுவிட்டு, அதனுடன் வாழைப்பழம் சாப்பிடலாமா? பனங்கிழங்கு பித்தமாயிற்றே? நீரே உடம்பைக் கெடுத்துக் கொண்டால் யார்தான் என்ன செய்யமுடியும்? நான் சொல்வது போலக் கேட்டால், உடம்பு சரியாகும். என்ன சொல்கிறீர்?" என்று கோபத்துடன் கேட்டான்.

"நீங்க என்ன சொல்றீங்களோ அதையே செய்கிறேன். என் உடம்பு சரியானால் சரி" என்றார் அவர்.

"அப்படியானால் இந்தச் சூரணத்தைச் சாப்பிடுங்க. இரண்டு நாள் பட்டினியாய்க் கிடக்க வேண்டும். ரொம்பப் பசியாக இருந்தால் கஞ்சி மட்டும் சாப்பிடலாம்" என்றான் மருத்துவன்.

மருத்துவனுக்குத் தரவேண்டிய பணத்தை வீட்டுக்காரர் தந்தார். இருவரும் வெளியே வந்தனர்.

சீடனால் வியப்பை அடக்க முடியவில்லை.

மருத்துவனைப் பார்த்து "தங்களுக்கு மருத்துவத்தோடு சோதிடமும் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றான் மருத்துவன்.

"இல்லை, அந்த நோயாளி பனங்கிழங்கும் வாழைப்பழமும்

சாப்பிட்டிருக்கிறான். அதனால்தான் வயிற்றுவலி வந்துள்ளது என்று எப்படிச் சரியாகச் சொன்னீர்கள்" என்று கேட்டான்.

"அதுவா... மருத்துவம் பார்ப்பதோடு இல்லாமல், நம் பகுத்தறிவையும் பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நம்மால் தொழிலில் நல்ல வெற்றி பெறமுடியும்."

"நான் அங்கே சென்றவுடன் அங்கிருந்த குப்பையைக் கவனித்தேன். அதில் ஏராளமான 'பனங்கிழங்குத் தோல்கள் கிடந்தன. படுக்கையின் அருகே நாலைந்து வாழைப்பழத் தோல்கள் கிடந்தன. இப்படிச் சொல்வது எல்லாம் பகுத்தறிவுதானே தவிர, சோதிடம் கிடையாது" என்று சொன்னான் மருத்துவன்.

சீடனுக்கு உண்மை புரிந்தது.

சில நாட்கள் சென்றன. மருத்துவனுக்கு உடல்நலம் இல்லாமல் போய்விட்டது.

அப்பொழுது, மருத்துவன் வீட்டுக்கு வந்த ஒருவன் "ஐயா! எங்க முதலாளிக்கு உடம்பு சரியில்லை. நீங்க உடனே வரணும்" என்றான்.

சீடனை அழைத்த மருத்துவன், "எனக்கு உடம்பு சரி இல்லை. நீ அவனுடன் சென்று நான் சொன்னபடி பகுத்தறிவினைப் பயன்படுத்தி மருந்து கொடுத்துவிட்டு வா" என்றான்.

உடனே சீடனும் புறப்பட்டான்.

நோயாளி படுக்கையில் புரண்டபடி முனகிக் கொண்டிருந்தான்.

சீடன் நோயாளியின் கைநாடியைப் பார்த்தான். நாக்கை நீட்டச் சொன்னான். நோயாளிக்குக் காய்ச்சல் அடித்துக் கொண்டிருப்பது அவனுக்குப் புரிந்தது.

தன் முகத்தை கடுமையாக வைத்துக்கொண்டு, "இவ்வளவு பெரிய ஆளாக இருக்கிறாயே! கொஞ்சமாவது அறிவு இருக்க வேண்டாம்? குதிரைக் கறியை மனிதர்கள் சாப்பிடுவார்களா? அதுவும் ஒரு முழுக் குதிரையை சாப்பிட்டிருக்கிறாய். நான் மட்டும் சிறிது நேரம் கழித்து வந்திருந்தால் உன்னைக் காப்பாற்றி இருக்கவே முடியாது" என்று கோபம் கொண்டவன் போல் கத்தினான்.

அவ்வளவுதான். வீட்டிலிருந்த பெரியவர், வேலைக்காரனைப் பார்த்து "வைத்தியனைக் கூப்பிட்டுக்கொண்டு வரச்சொன்னால் பைத்தியத்தைக் கூப்பிட்டுக்கொண்டு வந்திருக்கிறாயே" என்று திட்டினார்.

எல்லாரும் சேர்ந்து சீடனை அடிக்கத் தொடங்கினார்கள்.

'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று வீடு வந்து சேர்ந்தான்.

மருத்துவனிடம் நடந்ததை எல்லாம் சொன்னான். உடனே அவன், "நீ எதனால் நோயாளி குதிரைக் கறி சாப்பிட்டிருக்கிறான் என்று சொன்னாய்?" என்று கேட்டான்.

"நீங்கள் சொன்ன பகுத்தறிவினால் வந்த விளைவுதான் அது. நான் நோயாளி வீட்டுக்குள்ளே நுழையும்போது குப்பையைப் பார்த்தேன். அங்கே ஒன்றும் இல்லை. படுக்கைக்குக் கீழே பார்த்தேன். அங்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. அந்த அறையைச் சுற்றி நோட்டம் விட்டேன். குதிரைச் சேணம் மட்டும் மாட்டியிருந்தது. குதிரை இல்லை. அதனால், குதிரைக் கறி சாப்பிட்டதாகச் சொன்னேன்" என்றான் சீடன்.

இதைக் கேட்டதும், முட்டாள்தனமான தன் சீடனின் செயலைக் கேட்டு 'அழுவதா சிரிப்பதா' என்று தெரியாமல் விழித்தான் மருத்துவன்.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)



"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007